தமிழ்நாடு சட்ட மன்றம்.

வெள்ளிக்கிழமை, 1972 டிசம்பர் 15.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்ற மண்டபத்தில், பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் [திரு. சி. பி. சிற்றரசு] அவர்கள் தலைமையில் சட்ட மன்றம் கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

Leave salary for the Teacher

* 116 *Q.*—THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether a teacher who while on medical leave expires, is eligible for pay up to the date of his death;

(*b*) if so, whether leave salary in any such case has been refused by the Corporation of Madras in January 1969; and

(*c*) if so, the reasons therefor?

ஆசிரியருக்கு விடுப்பு ஊதியம்.

திரு. எம். ராஜா அய்யர்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) மருத்துவ விடுப்பிலிருக்கும்போது ஓர் ஆசிரியர் இறந்தா . அவர் இறந்த நாள் வரை ஊதியம் பெறத் தகுதியுடையவரா?

(இ) ஆமெனில், அத்தகைய ஆசிரியர் எவருக்காவது, 1969 ஜனவரி மாதத்தில் சென்னை மாநகராட்சி விடுப்பு ஊதியம் கொடுக்க மறுத் துள்ளதா?

(உ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) மருத்துவ விடுப்பில் இருந்தவர்கள் விடுப்பு முடிந்து பணியில் சேர்ந்தவுடன்தான் விடுப்பு ஊதியம் சென்னை மாநகராட்சியினால் வழங்கப் பட்டு வந்தது. ஆகவே, ஜனவரி 1969-ல் சென்னை மாநகராட்சி துவக்கப்

பள்ளியின் ஒரு தலைமையாசிரியருக்குரிய மருத்துவ விடுப்பூதியம் அவர் மருத்துவ விடுப்பில் இருந்தபோது இறந்துவிட்டபடியால் மறுக்கப்பட்டது. அவருடைய சட்டபூர்வமான வாரிசுகளுக்கு அவருக்குரிய மருத்துவ விடுப் பூதியம் வழங்கத்தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவிட்டன.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவரவர்களே, மருத்துவ விடுப்பில் இருக்கும்போது ஒருவர் இறந்துவிட்டால், அவர் இறந்த நாள் வரை ஊதியம் தர தகுதி உள்ளவரென்று அரசு அறிவித்திருக்கிறது. ஆகவே அவர் திரும்பவும் மறுபடி பதவியில் வந்து சேர்வது இயலாத காரிய மாகிறது. மறைந்த திரு. ஜம்புலிங்கம் என்ற ஆசிரியருக்கு, அவருக்குரிய ஊதியத்தை அவரது மனைவியாருக்கும், வாரிசுக்கும் கொடுக்க மறுத்து விட்டதன் காரணத்தைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இப்போதா வது கொடுக்கப்பட்டு விட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அந்த மாநகராட்சி மன்றத்தின் சட்ட விதிப்படி அது மறுக்கப்பட்டிருந்தது. அது தவறு என்று சொல்லி, அதைக் கொடுத்து விடலாம் என்று சொன்ன பிறகு "The leave salary willl be paid to his legal heirs. The correct procedure is now followed by the Corporation authorities என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. கொடுக்கப்பட்டிருக்குமென்று கருது கிறேன். அப்படியில்லையெனில் விரைவில் கொடுக்கப்படும்.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, இந்த ஆசிரியர் ஒரு ஏழை ஆசிரியர். பல மாதங்கள் கடுமையான காச நோயால் பீடிக்கப் பட்டு வாடினவர். அவருக்கு 13 மாதத்திற்கு "ex-gratia payment" என்று அவர் பெற்ற ஊதியத்தில், ½ சம்பளம் கொடுக்க வேண்டும். அதையும் மாநகராட்சி மன்றம் அவரது வாரிசுக்கு மறுத்திருக்கிறதென்று புகார் ஏதாவது வந்திருக்கிறதா? அப்படிப் புகார் வந்தால், அந்த ஏழைக் குடும்பத்திற்கு நியாயம் வழங்க அரசு ஆவன செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாநகராட்சி மன்றம் முதலில் கொடுக்க மறுத்தது. இது கொடுக்க வேண்டியதுதான் என்று சொன்ன பிறகு, இப்போது கொடுக்க ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஆசிரியருடைய வாரிசுகளுக்கு அந்த விடுப்பு ஊதியம் தரப்படும்.

திரு. கே. எஸ். கணபதி : தலைவர் அவர்களே, இந்த இரண்டாவது ஊதியக் குழுவின் சிபாரிசுகளுக்குப் பிறகு, 1—6—70 முதல் 2—10—70 வரையுள்ள காலத்தில் ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு, குறிப்பாக ஒரு சில அரசு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. அதன்படி ஓய்வு ஊதியம் கொடுக்கப்பட வேண்டுமென்று இருந்தும், என்னவோ சிக்கல் காரணமாக, ஒரு ஆசிரியருக்குக்கூட கொடுக்கப்படவில்லை "gratuity" கூட "பிக்ஸ்" ஆகவில்லை. ஆகவே அந்த அரசு ஆணையைச் செயல்படுத்து வதற்கு, அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரக் குறிப்பு என்னிடமில்லை. தனிக் கேள்வி கேட்டால், அதுபற்றிய விவரங்களை அறியலாம்.

S.S.L.C. Examination

* 117 Q.—THIRU K. ARIVAZHAGAN (on behalf of PULAVAR O.ARIVUDAI NAMBI) : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :—

(a) the number of High Schools (district-wise) from which not even a single student passed in the S.S.L.C. Examination held during 1971 ; and

(b) the steps taken or proposed to be taken to improve the standard of those High Schools ?

பள்ளி இறுதித் தேர்வு.

திரு. க. அறிவழகன் : (புலவர் ஒ. அறிவுடைநம்பி சார்பில்) : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) 1971-ஆம் ஆண்டு பள்ளி இறுதித் தேர்வில் ஒரு மாணவர் கூட வெற்றி பெருத உயர்நிலைப் பள்ளிகள் மாவட்டவாரியாக எத்தனை உள்ளன ?

(இ) அவ்வாறு உள்ள பள்ளிகளின் தரத்தை உயர்த்த அரசு (1) எடுக்க இருக்கும் (2) எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) தென்னுற்காடு மாவட்டத்தில் கீழக்கால்பண்டி, தாகம்தீர்த்தான்புரம் என்னும் ஊர்களிலுள்ள இரு அரசு உயர்நிலைப் பள்ளிகளில், 1971-ம் ஆண்டு நடைபெற்ற பள்ளியிறுதித் தேர்வு எழுதிய முறையே, நான்கு, பன்னிரண்டு மாணவர்களில் ஒருவர் கூடத் தேறவில்லை.

(இ) பள்ளி மாணவர்களுக்கு, விசேஷ வகுப்புகளும் பயிற்சிகளும் அளிக்கப்பட வேண்டுமென்றும், மாணவர்களின் திறனை அதிகரிக்கும் வகையில் வீட்டுப் பாடங்கள், வகுப்புகள் நடத்தப்பட வேண்டும் என்றும், ஆசிரியர்களின் கற்பிக்கும் முறைகள் கண்காணிக்கப்பட வேண்டும் என்றும், அவரவர் வீடுகளில் பாடங்களை படிக்க வசதியில்லையெனில், பள்ளிகளிலேயே படித்துச் செல்ல வகை செய்யப்பட வேண்டும் என்றும், பள்ளிக் கல்வி இயக்குநர், தென்னுற்காடு மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரி அவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, ஒரு பள்ளியில் 4 மாணவர்களும், இன்னொரு பள்ளியில் 12 மாணவர்களும்தான் பரீட்சைக்குப் போயிருக்கிருர்கள். அவர்களைத் தனியாகக் கவனித்து,